# **DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF IIIADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

O.S.No.2518 /2016

Deposition of witness for

PW1

Name : Tmt. Jain Nancy Bai

Age :W/o. Kamalanathan

Address :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day September of 2023 .

4.9.2023

2ம் பிரதிவாதி சார்பாக குறுக்கு விசாரணை

9.4.1972 ம் தேதியில் நான் பிறந்தேன். எனக்கும் என் மூத்த சகோதரி எனக்கு இரண்டு வயது பெரியவர். அவர் 1969லோ அல்லது 1970லோ பிறந்து இருக்கலாமா என்றால் அவரை தான் கேட்க வேண்டும். வழக்கு சொத்தை என் தாயார் 1980ல் கிரையம் வாங்கும்போது எனக்கு வயது 8. என் சகோதரிக்கு வயது 10 அல்லது 11 இருக்கலாம் என்றால் எனக்கு வயது 8 தான் ஆனால் என் சகோதரிக்கு என்ன வயது என்று எனக்கு தெரியாது. எனது அம்மாவும் அப்பாவும் பிரிந்தபோது எனக்கு சிறு வயதாகும். நான் என் தாயாருடன் இருந்தேன். என் பெற்றோருக்கு நாங்கள் மூன்று பெண் குழந்தைகள். மூன்றாவது பெண் குழந்தை எனது தந்தையுடன் இருக்கிறார். அதனால் அவர் வழக்கு போடவில்லை. நான் 9ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். 1ம் வாதி தேவி 12ம் வகுப்பு வரை படித்திருக்கிறார். என் தந்தை என் தாயாரை விட்டு பிரிந்த பிறகு என் தாயார் வீட்டு வேலை செய்து குடும்பத்தை காப்பாற்றி வந்தார். என் தாயாருக்கு உடன் பிறந்தவர்கள் யாருமில்லை என்று என் தாயார்

கூறியிருக்கிறார். எனக்கு திருமணமாகி 34 ஆண்டுகள் ஆகிறது. திருமணத்திற்கு பிறகு நான் என் கணவருடன் கொளத்தூரில் வாழ்ந்து வருகிறேன். 1ம் வாதி என் சகோதரிக்கு திருமணம் ஆகி 37 ஆண்டுகள் ஆகிறது. திருமணத்திற்கு பிறகு 1ம் வாதி என் தாயாருடன் வசித்து வந்தார். வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி 1980ம் ஆண்டு என் தாயார் வீட்டு வேலை செய்து கடன் வாங்கி கிரையம் வாங்கினார் என்றால் அது எனக்கு தெரியாது. அப்போது நான் சிறு பிள்ளை. 1980ல் எனக்கு 8 வயது என்பதாலும் என் சகோதரிக்கு என்னைவிட 2 வயது அதிகம் உள்ளவர் என்பதாலும், நாங்கள் இருவரும் வழக்கு சொத்தை கிரையம் வாங்குவதற்கு எந்த பங்கும் அளிக்கவில்லை என்றாலும், என் தாயார் தனது சுய சம்பாதிய பணத்தைக்கொண்டு கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. 1ம் வாதி திருமணத்திற்கு பிறகு தனது கணவர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றாலும் வழக்கு சொத்தில் அவர் என் தாயாருடன் வசிக்கவில்லை என்றாலும் சரியல்ல. என் தாயார் திருவேற்காடு மாரியம்மன் மீது மிகவும் பக்தியுடன் இருந்தார் என்றால் அவ்வபோது கோயிலுக்கு போவார். மிக பக்தி என்று சொல்லமுடியாது. என் தாயார் இறந்து 4 வருடங்களாகிறது. என் தாயார் திருவேற்காடு கோவிலில் இறந்தார். என் தாயார் இறப்பதற்கு 4 வருடத்திற்கு முன்பிலிருந்து 2ம் பிரதிவாதி ஆணையாளரிடம் அனுமதி பெற்று திருவேற்காடு அம்மன் கோவிலில் ஒரு அறையில் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் என் தாயார் வழக்கு சொத்தை திருவேற்காடு அம்மன் கோயிலுக்கு அதீத பகத்தியின் காரணமாக தான பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் தாயாரை நான் அவ்வபோது சென்று பார்த்து வருவேன். அவர் இறப்பதற்கு நான்கு நாட்கள் முன்பும் அதற்கு முன்பாக 10 நாட்களுக்கு முன்பும் நான் அவரை பார்த்தேன். என் தாயாரும் அடிக்கடி என் வீட்டிற்கு வருவார். என் தாயார் இறப்பதற்கு முன்பு 1ம் வாதி என் சகோதரியிடமும் நல்ல தொடர்பில் இருந்தார். என் தாயாருக்கு சொல்லிக்கொள்ளும்படியான வியாதி எதுவும் இல்லை. அவர் திடீரென்று மரணித்தார். என் தாயாருக்கு வெர்டிக்கோ வியாதி என்பது வா.சா.ஆ.11

ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வெர்டிக்கோ வியாதி என்றால் என்ன என்று எனக்கு தெரியாது. என் தாயார் நல்ல மனநிலையில் நல்ல உடல்நிலையில் என்ன செய்கிறோம் என்று தெரிந்து தான் தான பத்திரம் கோவிலுக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. என் தாயார் விண்ணபத்தின்பேரில் 11.11.1980ம் தேதி ஜீவனாம்சம் வழங்கவேண்டுமென்று என் தந்தைக்கு உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்பட்டதாக ஒரு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் என்ன தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி தீர்பின்படி என் தந்தை எனக்கு மாதம் ரூ.100/- வழங்கவேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 11.11.1980 ம் தேதியிட்ட தீர்ப்புக்கு முன்பாகவே வா.சா.ஆ-1 படி வழக்கு சொத்தை கிரையம் வாங்கியிருப்பதால் ஜீவனாம்ச தொகைக்கும் வழக்கு சொத்து கிரையம் வாங்கியதற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என் தாயார் இறந்த பிறகு 1ம் வாதி என் சகோதரி வழக்கு சொத்தின் பூட்டை உடைத்து அத்துமீறி நுழைந்து ஒரு அறையில் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. எனக்கும் 1ம் வாதிக்கும் வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் என் தாயார் தனது சுய சம்பாத்திய பணத்தைக்கொண்டு வழக்கு சொத்தை கிரையம் வாங்கினார் என்றாலும் அதை வாங்குவதற்கு நாங்கள் பணம் எதுவும் என் தாயாருக்கு கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி என் தாயார் திருவேற்காடு கோவிலுக்கு தான பத்திரம் எழுதிக்கொடுத்தபோது அவர்

நல்ல மனநிலையில் இல்லை என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness and admitted and acknowledged by the witness to be correct by affixing his signature.

4.9. 2023

III Addl. Sessions Judge.
III Addl. Court.